

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப. தாயகம் கவி தாயார் திருமதி ப.செளந்தரி அம்மையார் அவர்கள் உடல்நலக் குறைவால் மறைந்ததையொட்டி சென்னை மேற்கு மாம்பலத்தில் உள்ள இல்லத்திற்கு நேற்று முன்தினம் (27.10.2025) நேரில் சென்று அவரது திருவுடலுக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் குடும்பத்தினர் உடனிருந்தனர்.

### கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ.

# தாயார் திருமதி ப.செளந்தரி அம்மாள் மறைவு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – கழக முன்னணியினர் அஞ்சலி!

சென்னை,அக்.29-

கழக துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. தாயார் திருமதி ப.செளந்தரி அம்மாள் மறைவுக்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் அஞ்சலி செலுத்தினார்.

கழக துணை அமைப்புச் செயலளார் - திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவியின் தாயார் திருமதி. செளந்தரி அம்மாள் (வயது 97) நேற்று முன்தினம் (27.10.2025 ) இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



செய்தி அறிந்ததும், கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா, அன்பககம் கலை, பூச்சி முருகன், ஜெயக்குமார்,

டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், அன்பில் மகேஷ் பொய்யாமொழி, சிவமெய்யநாதன், மேயர் பிரியா, தயாநிதிமாறன், கலாநிதிவீராசாமி, காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை, புதுவை சிவா, சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், ஜோசப்சாமுவேல்,அ.வெற்றியழகன், ஜெ.கருணாநிதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, ஆ.கிருஷ்ணசாமி, ஆஸ்டின், பி.கே.பாபு, மு. மகேஷ்குமார், அப்துல்மாலிக், ஜோயல் எபினேசர் காரம்பாக்கம் கணபதி பகுதி கழக செயலாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, துரைராஜ், தமிழ்வேந்தன், தண்டலம் கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீதரன்,த.இளையஅருணா , மருத்துவர் கோகுல், கவிகனேசன் பிகே மூர்த்தி பரிதி இளம்சுருதி கன்னிகைஸ்டாலின் ராஜாஅன்பழகன் ஈரோடு இறைவன் இறையன்பன் குத்தூஸ் புழல் நாராயணண் சைதை மா அன்பரசன் தமீம் புஷ்பராஜ் அபோய் மோகன்குமார் த.சம்பத் கிருஷ்ணகுமார் உள்ளிட்ட பலரும் வருகை தந்து அஞ்சலி செலுத்தினர் அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (28.10.2025) மதியம் 2 மணியளவில் 15 \9 தலையாரி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை 33, இல்லத்தில் இருந்து புறப்பட்டு கண்ணம்மாபேட்டை இடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



சென்னை மண்டலத்திற்குட்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் நியமனம் மற்றும் இளைஞரணி ஆக்கப்பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நேற்று முன்தினம் (27.10.2025) அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில் கழக இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் தூத்துக்குடி எஸ்.ஜோயல் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் கோல்டு பிரகாஷ், ஜெ.ஜெ. எபினேசர் எம்.எல்.ஏ, பிரபாகராஜா எம்.எல்.ஏ, ராஜா அன்பழகன், ப.பிரகாஷ், ஆர்.டி.மதன்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமையில் நேற்று முன்தினம் (27–10–2025) ஆசிய இளையோர் கபடி போட்டியில் தங்கம் வென்ற கண்ணகி நகர் கார்த்திகாவை வாழ்த்தி, பாராட்டி வெள்ளி செங்கோல் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, மாவட்ட நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், பாலவாக்கம் தா.விஸ்வநாதன், மு.மனோகரன், எஸ்.பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் வி.இ.மதியழகன், பெருங்குடி எஸ்.வி. ரவிச்சந்திரன், எம்.கிருஷ்ணமூர்த்தி, நொளம்பூர் வே.ராஜன், வே.ஆனந்தம், எம்.விநாயகமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஏ.அரிகிருஷ்ணன், வட்டச் செயலாளர்கள் ஜோதி, ஏகாம்பரம், சீனிவாசன் மற்றும் கார்த்திகாவின் கபடி பயிற்சியாளர் ராஜ், கார்த்திகா குடும்பத்தினர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

### உலகச் செயல்முறை மருத்துவ நாள்!

# மாண்புடன் மக்கள் செயல்பட உதவும் மருத்துவர்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – சமூக வலைதளப் பதிவு!

சென்னை, அக். 29 -

உலகச் செயல்முறை மருத்துவ நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**உலகச்செயல்முறை மருத்துவ (Occupational Therapy) நாளில், மாண்புடனும் சுதந்திரமாகவும் மக்கள் செயல்பட உதவும் மருத்துவர்கள் அனைவருக்கும் எனது வணக்கங்கள்!**

**நமது திராவிட மாடல் அரசும் மாற்றுத் திறனாளிகளுக்கான 'விழுதுகள்' - ஒருங்கிணைந்த சேவை மையம், ஆட்டிசம் பாதித்தோருக்கான சிறப்புத் திறன் மையம் ஆகியவற்றைத் தொடங்கி இந்தச் செயல்பாடுகளை மேம்படுத்தி வருகிறது. அக்கறை, அனைவரையும் உள்ளடக்கிய தன்மை, ஒவ்வொரு தனிநபருக்கும் வாய்ப்பு கொண்ட தமிழ்நாட்டை ஒன்றிணைந்து உருவாக்கி வருகிறோம்.**

இவ்வாறு அப்பதிவில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மாநில அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில்

# கருநாடக மாநில தி.மு.க. சார்பில் முப்பெரும் விழா!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்பு!

பெங்களூரு, அக். 29 –

கருநாடக தி.மு.க. சார்பில் முப்பெரும் விழா 12.11.2025 தேதி புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அலசூர் ஏரி அருகில் உள்ள பெங்களூர் தமிழ்ச்சங்கம் திருவள்ளு வர் அரங்கில் நடைபெறுகிறது.

விழாவில் மாநில தி.மு.க. இளைஞரணி துணை அமைப்பாளர் மு.இராஜசேகர் வரவேற்புரை ஆற்றுகிறார், மாநில தி.மு.க. அமைப்பாளர் ந.இராமசாமி தலைமையில் தி.க.தலைவர் மு.ஜானகிராமன், துணைத் தலைவர் குணவேந்தன், கழக வழக்கறிஞர்கள் பாலாஜி சிங், சுரேஷ்பாபு, மாநில நிர்வாகிகள் மொ.பெரியசாமி, ஜி.இராம லிங்கம், குமுதா கருணாநிதி, பொதுக்குழு உறுப்பினர்கள் சிக்பெட் இராமன், கே.சிகாமணி, அன்பழகன், பிரான்ஸிஸ் சிவலிங்கம், முருகமணி மற்றும் இரா நாம்தேவ், ஏ.டி.ஆனந்தராஜ், கே.எஸ். சுந்தரேசன் ஆகியோர் முன்னிலையில் கழக முன்னோடிகளுக்கு விருதுகள் வழங்கி தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கருநாடக சுகாதாரத்துறை அமைச்சர் தினேஷ் குண்டுராவ் , சிவாஜிநகர் சட்டமன்ற உறுப்பினர்ரிஷ்வான் அசரத், கிருஷ்ண கிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தே.மதியழகன், எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் வை.பிரகாஷ், எம்.எல்.ஏ., ஓசூர் மேயர் எஸ்.ஏ. சத்யா, ஓசூர் மாநகராட்சி மன்றம் மத்திய தொ.மு.ச.பேரவை தலைவர் கி. நடராசன், தலைமை இளைஞரணி துணைச் செயலாளர் பி.எஸ். சீனிவாசன், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை செயலாளர் ஆர்.எஸ். கிரிஷ் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

மாநில தி.மு.க. முன்னாள் பொறுப்புக்குழு உறுப்பினர் வி. எஸ்.மணி நன்றி கூறுகிறார்.



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி 18 வது வார்டில் உள்ள திருவள்ளுவர் நகரில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை ஆகியோர்களின் முயற்சியினால் சாலை மழைநீர் கால்வாய் பூங்கா போன்ற அனைத்து மக்கள் நலப் பணிகளையும் செய்து தந்து நிறைவு பெற்ற நகராக மாற்றி அமைத்து தந்தமைக்காக பாராட்டு விழாவும் நன்றியும் தெரிவித்தனர். அப்பொழுது மாமன்ற உறுப்பினர் பிரேமலதா பண்டேரிநாதன் வட்டக் கழக பொறுப்பாளர் தமிழ் கோ. ரங்கநாதன் வட்டக் கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்.




திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மீஞ்சூர், நாலூர் நெடுஞ்சாலையில் உள்ள கால்வாய் மழை நீரால் நிரம்பி மக்கள் வசிக்கக்கூடிய கலைஞர் நகர், பத்மாவதி நகர் ஆகிய பகுதியில் தண்ணீர் புகுந்ததால் தகவலறிந்து மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் நேரில் பார்வையிட்டு JCB இயந்திரங்களை கொண்டு மழைநீர் அகற்றும் பணியில் ஈடுபட்டார். உடன் மீஞ்சூர் ஒன்றிய செயலாளர் ராஜா, முன்னாள் மாவட்ட பிரதிநிதி பா.து.தமிழரசன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### விக்கிரவாண்டி தொகுதி:

# அன்னியூர் சிவா எம்.எல்.ஏ. வெற்றி செல்லும்!

## உச்சநீதிமன்றம் உத்தரவு!



புதுடெல்லி, அக். 29 –

விக்கிரவாண்டி தேர்தலில் தி.மு.க. எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா வெற்றி பெற்றதை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உச்சநீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

விக்கிரவாண்டி தொகுதிக்கு கடந்த ஆண்டு ஜூலை மாதம் இடைத்தேர்தல் நடைபெற்றது.

அதில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட அன்னியூர் சிவா 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

இந்நிலையில், சிவாவின் வெற்றி செல்லாது என்று அறிவிக்கக்கோரி தேசிய மக்கள் சக்தி கட்சியின் ராஜமாணிக்கம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத் தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. அதனை எதிர்த்து ராஜமாணிக்கம் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நீதிபதி விக்ரம் நாத் தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதி கள் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

### தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி

# மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி. அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணியின் திருப்பூர் தெற்கு மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர்: வி. மணிகண்டன்
1/46சி, விளாமரத்துப்பட்டி அஞ்சல்,
உடுமலைப்பேட்டை - 642207,
திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் : 1)ஆர். மோகன்ராஜ், 342, ஆண்டாள் தெரு, ஆறுமுக கவுண்டர் லே அவுட், சிவசக்தி குடியிருப்பு, உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம். 2) கே. அய்யப்பன், 2/180ஏ, மேட்டு தெரு, கொழுமம் அஞ்சல், மடத்துக்குளம் - 642204, திருப்பூர் மாவட்டம். 3)ஆ. ருத்ரப்பன் 61, மெயின் ரோடு, சாமராயப்பட்டி அஞ்சல், குமரலிங்கம் - 642204, திருப்பூர் மாவட்டம். 4) நா. கனகராஜ், 372, ராமர் கோவில் தெரு, பள்ளபாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642112, திருப்பூர் மாவட்டம். 5) எஸ். ரபியுல்லா 79சி, காளிங்கராயர் நகர், ஜமீன் ஊத்துக்குளி - 642004, பொள்ளாச்சி, திருப்பூர் மாவட்டம். 6) ம. மனோஜ்குமார் 1/152, சோமவாரபட்டி, பெதப்பம்பட்டி அஞ்சல், உடுமலைப் பேட்டை, திருப்பூர் மாவட்டம். 7) சு. செந்தில்குமார் , 789, சின்னப்பன்புதூர், மைவாடி, மடத்துக்குளம், திருப்பூர் மாவட்டம் - 642203.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 27-10-2025

**தயாநிதி மாறன், எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க. விளையாட்டு
மேம்பாட்டு அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### க. சுப்பு

### அக்டோபர் 29 (2011)



**கழகத்தில் சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் திகழ்ந்தவர்.**

**மிசா சட்டத்தின்கீழ் ஓராண்டு கைதியாக சென்னை சிறையில் இருந்தார்.**

**சட்டமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினராக திகழ்ந்து திறம்பட பேசி வாதிட்டவர்.**

**கழகத்தில் தொழிலாளர் அணிச் செயலாளராகவும், பல்வேறு தொழிற்சங்கங்களில் தலைவராகவும் பணியாற்றினார்.**

**"பகைவரையும், வசீகரிக்கக்கூடிய பேச்சாற்றலும், வாதத்திறமையும் பெற்றவர் சுப்பு" என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**